



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.2.2026) தலைமைச் செயலகத்தில், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் அலுவலகப் பயன்பாட்டிற்காக 47 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 5 புதிய வாகனங்களை வழங்கிடும் வகையில் அவ்வாகனங்களுக்கான சாவிகளை ஓட்டுநர்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, திருமதி. பி.கீதாஜீவன், ஆர்.காந்தி, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மருத்துவர் மா.மதிவேந்தன், மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி, துணை மேயர் மு.மகேஷ்குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.02.2026) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் புதுக்கோட்டை தேவஸ்தான நிர்வாகத்தின்கீழ் உள்ள திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்கான உயர்த்தப்பட்ட அரசு மானியம் 10 கோடி ரூபாய்க்கான காசோலையை புதுக்கோட்டை மாவட்ட திருக்கோயில்களின் தக்கார் / உதவி ஆணையர் திருமதி ர.ரஞ்சிதா மற்றும் செயல் அலுவலர் எஸ்.அருண்பாண்டியன் ஆகியோரிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, த.மனோ தங்கராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் - இன்று

# விருதுநகரில் வரலாறு படைக்கும் கழக இளைஞர் அணி தென் மண்டல நிர்வாகிகள் சந்திப்பு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

விருதுநகர், பிப். 7 -

**கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று விருதுநகரில் வரலாறு படைக்கும் கழக இளைஞர் அணி தென் மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நடைபெறுகிறது. இதில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.**

இதுபற்றிய விவரம் வருமாறு:-

கடந்த 14.12.2025 அன்று திருவண்ணாமலை, கலைஞர் திடலில், 28 கழக மாவட்டங்களுக்கு உட்பட்ட 91 சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் முதல் பாகம் வரை, வாக்குச்சாவடி அளவிலான இளைஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் என ஒரு இலட்சத்து 30 ஆயிரம் இளைஞர் அணி நிர்வாகிகள் வெண் சீருடை அணிந்து, “பார் சிறுத்ததோ, படை பெருத்ததோ” என்று சொல்லத்தக்க வகையில், அகிலமே வியக்கும் வண்ணம் மாபெரும் எழுச்சியோடு “தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு” வெற்றிகரமாக நடை பெற்றதைத் தொடர்ந்து;





முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட - கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில்;

கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, திருமதி கனிமொழி கருணாநிதி எம்.பி., திருச்சி சிவா எம்.பி., ஆ.இராசா எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., மு.பெ.சாமிநாதன், விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.ரகு, நா.இளையராஜா (தலைவர் - தாட்கோ,) ப.அப்துல்மாலிக், கே.இ.பிரகாஷ் எம்.பி., க.பிரபு, பி.எஸ்.சீனிவாசன், சி.ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலையில் - விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் வரவேற்பில்;

இன்று (07.02.2026 - சனிக்கிழமை), மாலை 4.00 மணி அளவில், விருதுநகர், ‘கலைஞர் திடலில் “தென் மண்டல தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு” நடைபெறுகிறது.

இதில், தென்மண்டலத்தைச் சேர்ந்த கழக மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், கிளை மற்றும் வாக்குச்சாவடி அளவிலான இளைஞர் அணி நிர்வாகிகள் வெண்சீருடை அணிந்து வரலாறு படைத்திட, அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து இளைஞர் அணி நிர்வாகிகளை “தென்மண்டல நிர்வாகிகள் சந்திப்பிற்கு” அழைத்து வரும் பொறுப்பினை மேற்கொண்டுள்ளனர்.

வரலாறு படைக்கப் போகும் இந்த “தி.மு.க. இளைஞர் அணி தென்மண்டல நிர்வாகிகள் சந்திப்பில்” அமைச்சர் பெருமக்களான கே.ஆர். பெரியகருப்பன், பி.கீதாஜீவன், அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், அர.சக்கரபாணி, பி.மூர்த்தி, பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், த.மனோதங்கராஜ்;

மாவட்டச் செயலாளர்கள் /பொறுப்பாளர்களான இரா.ஆவுடையப்பன், இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ., கோ.தளபதி எம்.எல்.ஏ., நா.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., மு.மணிமாறன், மேயர் ரெ.மகேஷ், ஈ.ராஜா எம்.எல்.ஏ., வே. ஜெயபாலன், ம.கிரகாம்பெல் ;

மாநகரச் செயலாளர்களான எஸ்.ஆர். ஆனந்த சேகரன், எஸ்.ஏ.உதயசூரியன், பரமணி ஆனந்த், ஏ.எல்.பி.தினேஷ், சு.சுப்பிர மணியன், எஸ்.ராஜப்பா;

தென்மண்டல இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்களான ம.கணேசன், தனுஷ் எம்.குமார், இரா.கிருஷ்ணகுமார், எ.எஸ்.ஹரிஹரசுதன், சி.எம்.மதியழகன், நாகனி பா.செந்தில்குமார், பா.வில்சன் மணிதுரை, பை.மு.ராமஜெயம், கே.சம்பத்ராஜா, எம்.எஸ்.செல்வம், அ.ஆஜிப்கான், வி.விமல், டி.ஆர். கிருஷ்ணராஜா, டி.எம்.எஸ்.முகேஷ், வி.அகஸ்தீசன், டி.ஜெக நாதன், ஜெ.ஜான்ரபீந்தர், ஏ.ஆர். சௌந்தர்ராஜன், மு.இளங்கோ; மாநகர அமைப்பாளர்களான கே.கே.கருப்பசாமி, கோட்டையப்பன், அ.அப்துல் ரஹ்மான், எஸ்.அருண் சுந்தர், சி.டி.சுரேஷ், த.முத்துசெல்வம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா நன்றியுரையாற்றுகிறார்.

---

### பேரறிஞர் அண்ணாவை எங்கள் மனங்களில் அரசராக அரியணை ஏற்றியவர்கள் நாங்கள்!

# தமிழன் பிச்சை எடுக்கமாட்டான்! உங்கள் பிச்சையை ஏற்கவும் மாட்டான்!

## நாடாளுமன்ற மாநிலங்களவையில் கலைஞானி கமலஹாசன் உணர்ச்சி உரை!

சென்னை, பிப். 7 -

**நாடாளுமன்ற மாநிலங்களவையில் கலைஞானி கமலஹாசன் அவர்கள் தமது கன்னிப் பேச்சில் “பேரறிஞர் அண்ணாவை எங்கள் மனங்களில் அரசராக அரியணை ஏற்றியவர்கள் நாங்கள் என்றும் தமிழன் பிச்சை எடுக்க மாட்டான், உங்கள் பிச்சையை ஏற்கவும் மாட்டான்” என்று உணர்ச்சியுடன் கூறினார்.**

**நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்கி நடந்து வருகிறது. அதில், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் மக்கள் நீதி மய்யத் தலைவரும், எம்.பியுமான கமல்ஹாசன் உரையாற்றினார். மாநிலங்களவையில் அவர் ஆற்றும் முதல் உரை இது என்பதால் கூடுதல் கவனம் பெற்றது.**

**நாடாளுமன்ற மாநிலங்களவையில் கலைஞானி கமலஹாசன் அவர்கள் பேசியதாவது:-**

“இங்கு வரமுடியாமல் போன எம் தமிழர் தலைவர்களுக்கும், என் நண்பர் ஸ்டாலினுக்கும் நன்றி. உயர்ந்த உங்கள் அரசியலில் பங்கேற்க வேண்டும் என்ற ஒரு சாமானியனின் ஆர்வத்தை மன்னித்துவிடுங்கள். ஆனால், வரலாற்றின் போக்கை மாற்றியதும், ஏகாதிபத்திய சர்வாதிகாரிகளை வீழ்த்தியதும் இந்தச் சாமானியர்கள்தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். தண்டி யாத்திரையை நினைவுகூருங்கள்.

இப்போது நாம் நிகழ்காலத்தைப் பார்ப்போம். எனது உடனடி கவலை வரவிருக்கும் தேர்தல்கள் பற்றியது. எங்களின் தற்போதைய நிலையை ‘உயிரோடு இருப்பவர்களின் மரண வாக்குமூலம்’ என்று அழைக்கிறேன். நாங்கள் வாக்களிக்க விரும்புகிறோம், ஆனால் தேர்தல் ஆணையம் எழுத்துப் பிழைகளையும் முகவரிகளையும் காரணம் காட்டி எங்களது வாக்களிக்கும் உரிமையையே கேள்விக்குள்ளாக்குகிறது.

‘ஸ்பெல்’ என்பது ஒரு சொல்லாகவும் இருக்கலாம் அல்லது ஒரு மந்திரமாகவும் இருக்கலாம். நவீன இலக்கியமும் இணையமும் உள்ளடக்கத்திற்காக எழுத்துப் பிழைகளை மன்னிக்கின்றன, ஆனால் தேர்தல் ஆணையம் மன்னிப்பதில்லை. ‘EC’ என்றால் ‘ஆங்கிலப் பயிற்சியாளர்கள்’ (English Coaches) என்று அர்த்தமல்ல. பீகார் ஏற்கனவே பல ‘வாழும் பிணங்களின்’ (வாக்காளர் பட்டியலில் இல்லாதவர்கள்) தேசமாகிவிட்டது.

**1 கோடி ‘வாழும் பிணங்கள்’ காகிதத்தில் உருவாக்கப்பட்டுள்ளது!**

இந்த நோய் நாடு முழுவதும் பரவுவதை நாங்கள் விரும்பவில்லை. வங்காளத்தைச் சேர்ந்த எனது சகோதரியும் (மம்தா பானர்ஜி) இதையேதான் புலம்புகிறார். இதற்காக அவர் உச்ச நீதிமன்றத்தில் போராடிக் கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டிலும் கிட்டத்தட்ட ஒரு கோடி ‘வாழும் பிணங்கள்’ காகித அளவில் உருவாக்கப்பட்டு விடுவார்களோ என்று நாங்கள் அஞ்சுகிறோம்.

எனது தேசம் பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் இந்த அவைக்குள் வந்து தங்கள் மக்களுக்காகப்



பேசுவதற்கு கதவுகளைத் திறந்து வைத்துள்ளது. எனக்கு அந்தத் திரைத்துறையின் வாயிலாக இந்தக் கதவு திறந்தது. பரமக்குடியிலிருந்து வந்த ஒரு குழந்தையைச் சினிமா புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றது. அந்தச் சினிமாதான் எனக்குத் தமிழ் வரலாற்றை அறிமுகப்படுத்தியது. அப்போதுதான் இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் என்ற அரசியலமைப்பு வாக்குறுதிக்கும், யதார்த்தத்திற்கும் இடையே உள்ள இடைவெளியை நான் உணர்ந்தேன்.

**எனக்குத் தமிழை அறிமுகப்படுத்திய அண்ணா!**

எனக்குத் தமிழை அறிமுகப்படுத்திய ஆசிரியர்களில் ஒருவர் அரசியல் தலைவர் அண்ணா. ‘துரை’ (Durai) என்றால் பிரெஞ்சு மொழியில் அரசன் என்று பொருள். அவர் அரசராகப் பிறக்கவில்லை, ஆனால் தமிழர்களாகிய நாங்கள் அவரை எங்கள் மனங்களில் அரசராக அரியணையில் ஏற்றினோம். எமது மொழி, கலாசாரம் மற்றும் உரிமைகள் மீதான எந்தவொரு ஆக்கிரமிப்பையும் எப்படி எதிர்கொள்வது என்று அவர் எங்களுக்குக் கற்றுக்கொடுத்தார்.

57 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று நான் உங்கள் முன்னால் பேசுகிறேன். 1969, பிப்ரவரி 3ம் தேதி அவர் மறைந்த தினம். எனது சித்தாந்தத்தின் தந்தைகளில் ஒருவரை இழந்த நான் அப்போது 14 வயது சிறுவன். இன்று அவர் பேசிய அதே அவையில் நான் பேசுகிறேன். இது மேடை அச்சம் அல்ல, உணர்ச்சிகளால் நான் நடுங்குகிறேன். எனக்குள் இருக்கும் உணர்ச்சிப் பெருக்கெடுத்து உங்களைத் புண்படுத்திவிடக் கூடாது என்பதற்காகவே நான் இதையெல்லாம் எழுதி வைத்திருக்கிறேன்.

**முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!**

இன்று அண்ணாவின் மகனாகவும், காந்தி மற்றும் பெரியாரின் கொள்ளுப் பேரனாகவும் உங்கள் முன் நிற்கிறேன். எனது அன்பு நண்பர் மு.க.ஸ்டாலினுக்கு எனது நன்றி.

பட்ஜெட் கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கிறது. பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்திய நான், பொருளாதாரம் பற்றிப் பேசத் தகுதியற்றவன் என்று நீங்கள் சொல்லலாம். இருந்தாலும், ஒரு மாணவனாக எனக்கு ஒரு கருத்து உண்டு. கோபமில்லாமல் இந்தப் பேச்சை எழுத காந்தி உதவினார், தர்க்கத்தை (Logic) சேர்க்க பெரியார் உதவினார், இந்த அவையைப் புரிந்து கொள்ள அண்ணா உதவினார்.

கடைசியாக ஒன்று, மொழிப்போர் என்ற காலம் முடிந்துவிட்டது என்று நினைக்கிறேன். ஏனெனில் செயற்கை நுண்ணறிவு (AI) வந்துவிட்டது. ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு உடனுக்குடன் மொழிபெயர்க்கும் வசதி இப்போது உள்ளது. பாரதப் பிரதமர் காசி தமிழ்ச் சங்கமத்தில் பேசிய போது, அவரது பேச்சு ஐந்து நிமிடங்களில் தமிழில் உடனுக்குடன் மொழிபெயர்க்கப்பட்டது. எனவே, மொழியை வைத்து மோதலை உருவாக்க நினைப்பவர்கள் தங்களது சொந்தக் கற்பனை உலகில் வாழ்கிறார்கள் என்றே நான் நினைக்கிறேன்.”

**தமிழன் பிச்சை எடுக்கமாட்டான்!**

“நீங்கள் வெள்ளைக்கார கல்வி கற்றது கண்டிப்பாய் கற்பூர புத்தி தான். அது காற்றோடு போய் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அதன் பிறகுதான் உங்கள் பிச்சை பாத்திரம் உருவாக்கப்பட்டது. பிச்சை குவளை பெரும் உண்டியலானது. அந்த உண்டியலை உடைத்து நிதி திரட்ட உதவுவோர், இன்று தமிழை, தமிழரை பார்த்து தமிழ் பிச்சை எடுக்கக்கூட உதவாது என்கிறீர்கள். ஓரளவு உண்மைதான். தமக்கென உங்கள் நிதியை திரட்ட ஆங்கிலத்தில், இந்தியில் பிச்சை எடுக்கலாமே... தமிழ் பிச்சை எடுக்க உதவாது, திருடவும் உதவாது.

தமிழன் பிச்சை எடுக்க மாட்டான், அதுவும் உங்கள் பிச்சையை ஏற்கவே மாட்டான். ஓட்டையும் நாட்டையும் இந்த கமலஹாசன் விற்கவே மாட்டான். உங்கள் சாபங்களில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. உங்களுக்கு இருக்கக்கூடும் என்ற நம்பிக்கையில், நீங்கள் உணர என் திட்டத்தை சாபமாய் போடுகிறேன், கருணையுடன் நீங்களே ஏற்பீர். உங்கள் இஷ்ட தெய்வங்களை வேண்டிக்கொள்ளுங்கள். பகுத்தறிந்த தமிழ்ச் சித்தன் கூற்று இது ‘உம் வினை உம்மை சுடுக’. எங்கள் நாடு நீடூழி வாழும், உம் வினை உம்மைச் சுடுக, ஓட்டப்பம் வீட்டைச் சுடுக. ‘வந்தீர் வென்றீர் செல்வீர்’ இது உலக நியதி, அரசியல் நியதியும்கூட. வீழ்க வளமுடன். தமிழ் என்றும் வாழும் நலமுடன்.”

இவ்வாறு கலைஞானி கமலஹாசன் மாநிலங்களவையில் உரையாற்றினார்.